143



# புராதன இந்தியா

திரு வேநீ. தட்சிணாமூர்த்தி

V2
N63
112695

ஸ்ரீ சம்பூர்ண சரஸ்வதி கிரந்த மாலை—பதினைந்து

## அயல் நாட்டவர் கண்களுக்குப்

# புராதன இந்தியா

( புதிதாக எழுத்தறிவு பெறுவோர்க்கென மிகச் சிறந்த
நூலாக இந்திய அரசாங்கத்தினால் முதற் பரிசு
வழங்கப் பெற்ற புத்தகம். இந்திய
மொழிகள் அனைத்திலும் மொழி
பெயர்க்கப்படுவது )

திரு. வே. நீ. தட்சிணாமூர்த்தி

ஸ்ரீ சம்பூர்ண சரஸ்வதி கிரந்தாலயம்
( பன்மொழி நூல் வெளியிடுவோர் )
நெல்லிக்குப்பம் :: தென்னிந்தியா

[TAMIL]

*Shri Sampoorna Saraswathi Grantha Mala - Fifteen*

AYAL NAATTAVAR KANGALUKKU

# PURATHANA INDIA

*(First Prize awarded by the Govt. of India as the best book for Neo-Literates)*

Price Rs. 1—75

ORIGINAL — BIDESHIR CHOKHE PRACHIN BHARAT — BENGALI

By

SHRI BIMALA PRASAD MUKHOPADYAYA

*Translated by*

© SHRI N. DHAKSHINA MOORTHI

First Impression May 1963 (Jyaishta 1885)

Printed at the Srinivas Printing Press, 329, Mint Street, Madras-1

Publishers :

SHRI SAMPOORNA SARASWATHI GRANTHALAYA

(Publishers of Multi - Lingual Literature)

NELLIKUPPAM : : SOUTH INDIA

## ACKNOWLEDGMENTS

Thanks, with acknowledgments, are due to Messrs Vidyodaya Library Private Ltd, Calcutta and to Shri Mana Mohan Mukherjee and to Shri Bimala prasad Mukhopadhyaya for permission to translate and publish their original work ‘Bideshir Chokhe prachin Bharat’, in Tamil, Telugu, Malayalam and Kannada.

# சமர்ப்பணம்

ஆசிரியர் பணியில் வழி வழியாய் வந்து, நம் தமிழ்ச் சிறுர்களுக்கு அறிவூட்டியவர் எனது பாட்டனுர். அவருடைய கல்வித் தொண்டும், வேதாந்த போதனைகளும் ஐம்பதாண்டுகளுக்கு முன்னரே மிக்க பயன் பட்டவை. ஞானமணியான காலஞ்சென்ற ஞானநந்த சுவாமிகளையும் ஆசிரிய மணியான வே. நீலகண்ட ஐயரையும் இவ் வுலகிற்கு அளித்து 1942-ம் ஆண்டில், தமது எண்பத்தைந்தாம் ஆண்டில் இறைவனடி சேர்ந்த

அவளூர்பேட்டை

**திரு. கு. வேலாயுத ஐயர் அவர்களுக்கு**

இந்நூலை நினைவு மலராகச் சமர்ப்பிக்கின்றேன்.

# முன்னுரை

அகண்ட பிரபஞ்சத்தின் ஆதியாய் நின்ற விநாயகப் பெருமான் திருவடி தொழுவோம். அகில உலக முழுமையும் புகழ் பெற்ற பாரதநாட்டின் வரலாறு நம்மில் பலருக்குத் தெரிந்ததே. அக்காலந் தொட்டே இந்நாடு நாகரிகத்தின் தோற்றுவாயாக அமைந்து மற்ற நாடுகளுக்கெல்லாம் மத, தர்ம, பரிபாலன முறைகளை வாரி வழங்கி வந்தது. இந் நாட்டின்மீது அன்னியர்கள் கொண்ட பெருமையும் ஆவலும் இந்நாட்டினை உலகுக்கு ஒரு வழிகாட்டியாகக் கருத இட மாயிற்று. அயல் நாட்டவர்களின் ஆழ்ந்த பக்தி சிரத்தைக் குரிய நாடாக நமது நாடு விளங்கி வந்தது. கற்றறிந்த அயல் நாட்டுப் பெரியார்கள் போற்றிய நாடு நம் நாடு. இவ் வனைத்தையும் அயல் நாட்டு யாத்திரீகர்களின் குறிப் பேட்டின் மூலமாகக் காணலாம். இந்தியா இமயம் முதல் கன்னியாகுமரி வரை ஒப்பற்ற தொடர்புள்ளது. மதம், சூழ் நிலை, சமூகம், மொழி ஆகியவற்றின் உயிர்ப்பு ஒரே தன்மை உடையதாயிருந்தது; இருந்து வருகிறது. தெய்வ வழி பாட்டிலும் ஒரே உயர்ந்த மார்க்கம் கொண்டது நமது நாடு. வழிபாட்டு வகைகள் ஒரு லட்சியத்தை மேற் கொண்டன வாகும்.

இந்தியா இயற்கை அமைப்பிலும், சமூகப் பண்பிலும், மக்கள் லட்சியத்திலும் ஒருமைப்பாடுடையது என்பதைக் கூர்ந்து ஆராய்பவர்கள் ஒப்புக் கொண்டதாகும். அயல் நாட்டு யாத்திரீகர்களாக வந்த மிகச் சிறந்த பண்டைய அறிஞர்களான மெகஸ்தனிஸ், யுவான் சுவாங், பாஹியான் ஈ சிங் ஆகியோர் எழுதி வைத்த வரலாற்றிலிருந்து இந்த நிலைமையை உணரலாம். நமது நாடு மதப் பெரியார்களைத் தோற்றுவித்த நாடு மட்டுமல்ல, மக்கள் இனத்துக்கே இன்று விஞ்ஞான உலகம் தேடிக் கொண்டிருக்கும் லட்சியத்தை

வாரி வழங்கியதாகும். நமது நாட்டு அமைதியான, லட்சிய வாழ்க்கையை சிறப்புறச் சுருங்கக் கூறும் இந்நூல் பல எடுத்துக்காட்டுகளை வழங்குகிறது. அயல் நாட்டுப் பெரியார்கள் நம் நாட்டை எவ்வளவு சிறந்த முறையில் புகழ்ந்து எழுதி வைத்திருக்கிறார்கள் என்பது இன்று அயல்நாடுகளில் புத்தமதம் பரவியிருப்பதனால் அறிய முடியும். இன்று பெரும் விஞ்ஞான மேதைகள் தத்துவ வளர்ச்சியில் மதம் ஒரு சிறந்த மார்க்கம் என்பதையும், தத்துவமும் மதமும் உயிரும் உடலும் போன்றதாகும் என்பதையும் வலியுறுத்துகின்றனர் என்றால், இந்த வளர்ச்சியில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே மேம்பட்டிருந்த நம் நாட்டு வரலாறு பெருமைக்குரியதென்று கூறவேண்டியதில்லை.

உலகம் சிறந்த நாகரிக வாயிலை அடைந்து வருகிறது. ஒருவரோடு ஒருவர் தொடர்பு மிகுந்து வருகிறது. அன்று ஒரு சில யாத்திரீகர்கள் இந்நாட்டிலிருந்து அயல் நாட்டிற்கும் அயல் நாட்டிலிருந்து இந்நாட்டிற்கும் வந்தனர். இன்று யாத்திரீகர்களுடைய எண்ணிக்கை அளவு மிகுந்து விட்டது. போக்கு வரவும், மற்றச் சமூகத்தொடர்பும் இன்று உலக முழுமையும் நிறைந்து விடடது. ஆனால்......எதிர் பார்த்த அளவு அல்லது சரித்திரம் கூறும் லட்சிய எல்லை எதையும் நாம் அடைந்து விட்டதாகத் தெரியவில்லை. முன்னேற்றத்துக்கான போட்டி மனப்பான்மை எவரும் விரும்புவதேயாகும். ஒற்றுமையைக் குறைக்கும், தொடர்பை அறுக்கும் அல்லது வேற்றுமையை வளர்க்கும் எண்ணம், சொல், செயல், யாவும் நாகரிகத்தின் வேரைத் தின்னும் கரையான்களாகும். ஆனால் நாகரிகம் சிறந்த நாகரிகமாக இருக்குமேயானால் வேற்றுமைச் செயல்கள் இராமல் போகும். உலக ஒற்றுமை ஓங்கும். மக்கள் இனம் மேம்பாடடையும். எனவே சிறந்த நாகரிகத்தை அடைய இந்நூல் ஒரு சிறு உதாரணமாக விளங்கும்.

எந்த நாடும் பெருமை பெற்ற நாடே. எல்லா மக்களும் மக்களே. ஆனால் லட்சியத்தில், சிறந்த நாகரிகத்தில் தவற நேர்ந்தால் அது மக்களுக்கு ஈனம் விளைவிப்பதாகிவிடும்.

இன்று சீனுவின் தவருன பாதை அதன் பெருமையைக் குலைத்து வருகிறது. ஆனல் சீன தனது தவறு உணர்ந்து திருத்திக் கொண்டால் நமது சகோதரநாடு என்பதில் மாற்றம் இருக்கப் போவதில்லை. அன்று சீன யாத்திரீகர்கள் காட்டிய பாதையை, நல்ல அறிவுரையை, இந்தியாமீது வைத்திருந்த பெரும் பக்தியை இன்று மறந்திருக்கலாம். இந்தியா அந் நாட்டிற்கு வழங்கிய மத போதனையை, நீதி போதனையை, தர்மத்தை சீன யாத்திரீகர்கள் லட்சிய போதனையாக ஏற்றுக் கொண்டிருந்தனர். அன்று இந்திய நாகரிகம் அவர் களுக்கு நாகரிகத்தைக் கற்பித்தது. இங்கு வந்து கற்றுச் சென்றனர். ஆனல் இன்று 'நாகரிகம்' வளர்ந்த உலகம் என்று கூறுவதில் பொருள் இல்லை. நாகரிகச் சொல்லுக்குக் குறை வராமல் அண்டை நாட்டுச் சகோதரர்கள் நடந்து கொள்ள வேண்டும். நமது நாட்டு சத்திய, அஹிம்ஸா லட்சியத்தைக் கொண்டு இன்னும் அவர்கள் பாடம் கற்க வேண்டும். அதற்கு மாருக நடப்பது நாகரிகம் அல்ல.

ஒன்று மட்டும் உறுதி. அன்றும், இன்றும், என்றும் இந்தியர்களாகிய நாம் பொறுமையிலும், அன்பிலும், ஒற்றுமையிலும், லட்சியத்திலும், தியாகத்திலும் குறைந்த வர்களல்ல. தர்மத்தைக் கை விடுபவர்களல்ல. அதற்கு இன்றைய நிலைமைகள் எடுத்துக் காட்டு. அன்றைய சீன யாத்திரீகர்களின் புகழுரைகளுக்கு இச் சிறு நூல் எடுத்துக் காட்டு. எனவே மிகச் சிறந்த இந்நூலை தமிழ்ப்பெரு மக்கள் படித்து மகிழ இந்திய அரசாங்கக் கல்வித் துறையினர் ஊக்குவித்தமைக்கு என் நன்றியும் பணிவுள்ள வணக்கமும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வேநீ. தட்சிணுமூர்த்தி**

## அயல் நாட்டவர் கண்களுக்குப்

# புராதன இந்தியா

**தொடக்கம் :**

நமது இந்தியா ஒரு புராதன நாடு. உண்மையில் இதைப்போல் புனிதமான நாடு வேறு கிடையாது. இந் நாட்டின் சமூக, மத, தொழில் நிலைமைகளைக் கண்டறிந்து கொள்வதற்காக எத்தனையோ யாத்திரீகர்கள் இந்தியாவுக்கு வந்திருக்கின்றனர்! இரண்டாயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் மெகஸ்தனிஸ் எனும் கிரேக்க தூதுவர் மேற்கு நாட்டிலிருந்து வந்தார். அதன் பிறகு சீனாவிலிருந்து பாஹியான், யுவான் சுவாங், ஈசிங் ஆகியோர் வந்தனர். அவர்கள் இந்திய பூமியைப் புனிதமாகக் கருதினர். இங்கு யாத்திரையாக வந்தனர். சாதாரண கதைகளைப் போலவே அவர்களுடைய பிரயாண வரலாறுகளும் உற்சாகம் மிக்கவை. இவ் வரலாறுகளால் ஒருவர் இந்தியாவின் சமூகம், மதம் சம்பந்தமான நிலைமைகளைப் பற்றி நிறையத் தெரிந்து கொள்ள முடியும்.

ஆசியாவை வெல்ல வேண்டும் என்பதற்காக கிரேக்க வீரர் அலெக்ஸாந்தர் கிழக்கு நோக்கிப் படையெடுத்து வந்தார். அப்பொழுது அவரைப் பின்பற்றிப் பலர் வந்தார்கள். அவர்கள் கற்றறிந்த

மேதைகள். அவர்கள் பார்த்த நாட்டின் பகுதிகளைப் பற்றித் தமது சொந்த அனுபவங்களை எழுதி வைத்திருந்தனர். இவ்வாறு கற்றறிந்த கிரேக்க அரசாங்க அதிகாரிகள் இந்தியாவைப் பற்றிய விவரத்தை எழுதி வைத்துச் சென்றனர். இவர்களில் இரண்டு அதிகாரிகள் குறிப்பிடத் தக்கவர்கள். அவர்களின் பெயர் டெமாகஸ், மெகஸ்தனிஸ் ஆகும். அவர்கள் அக்காலத் தலைநகரான பாடலீ புத்திரத்தில் வந்து தங்கினர். இந்தியாவைப் பற்றிப் பல நல்ல விஷயங்களை எழுதிவைத்தனர். மெகஸ்தனிஸ் தான் முதல் எழுத்தாளர். அவருடைய புத்தகத்தில் சந்திரகுப்த மௌரியரின் நாட்டைப் பற்றியும் அரசாட்சியைப் பற்றியும் காணலாம். அரசருடைய குண நலன்களைச் சித்தரிக்கிறார். அதுமட்டுமன்றி அவருடைய அரண்மனை, அரசாட்சி மன்றம் ஆகியவற்றையும் அறிமுகப்படுத்துகிறார். மேலும் மக்களின் இயல்பு, இந்திய மண் வளம், பருவ நிலைமைகள் ஆகியவற்றை விவரிக்கிறார் ஆறுகள், விவசாயம், தொழில்கள், பழக்க வழக் கங்கள், அரசாட்சி முறை முதலான வற்றையும் விவரிக்கிறார். இனம், சமூகம், பொதுவாகப் பலவகை சாதிகள் இருந்ததையும் தெரிவிக்கிறார். வாழ்க் கைக்கான பலவேறு தொழில்களையும் தெரியப் படுத்துகிறார்.

மெகஸ்தனிஸுக்குப் பிறகு சீனாவிலிருந்து பல மேதைகள் இந்தியாவுக்கு விஜயம் செய்தனர். பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னர் புத்தமதம் இந்தியாவிலிருந்து சீனாவுக்குப் பரவியது. இந்த சம்பவத்துக்கு பிறகுதான் சீனாவின் புத்த மத

அறிஞர்களுக்கு இந்தியாவைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவல் தோன்றியது. இந் நாட்டின் பழம் பெருமையை உணரலாயினர். குப்த அரசரான இரண்டாம் சந்திர குப்தர் காலத்தில் பாஹியான் இந்தியாவுக்கு வந்தார். இங்கு கி. பி. 399 முதல் 414 வரை பதினைந்து ஆண்டுகள் காலம் கழித்தார். அதன் பிறகு யுவான் சுவாங் வந்தார். புகழ் பெற்ற ஹர்ஷர் ஆட்சியில் கி. பி. 629 முதல் 645 வரைக் கிட்டத் தட்டப் பதினேழு ஆண்டுகள் இருந்தார். புத்த மத ஸ்தலங் களை ஒன்றன் பின் ஒன்ருகத் தரிசித்து வந்தார். இவருக்குப் பிறகு உடனேயே ஈசிங் வந்தார். இவரும் மிகப் பெரிய சீனத்து மேதை. இவர் தமது நாட்டை விட்டு கி. பி. 671 முதல் 695 வரை இருபது ஆண்டுகளுக்கு மேலாக இங்கு வசித்தார். புனிதமான புத்தமத ஸ்தலங்களையும் விஹாரங் களையும் தரிசித்து வந்தார். புத்தரின் கல் வெட்டுக் களைப் படித்து வந்தார்.

இந்தியாவுக்கும் சீனுவுக்கும் இடையில் ஏற்பட்ட தொடர்பு மிக நீண்ட காலத்தது ஆகும். மிகப் பண்டைய காலத்திலிருந்தே இவ்விரு நாடுகளும் ஒன்றை யொன்று அறிந்து கொள்ள லாயின. இவ்வுறவு வெறுந் தொழில், வர்த்தகத்தி லிருந்து மட்டும் வளர்ந்ததன்று. புத்த மதம் பரவியதன் விளைவாக இந்தியாவுடன் சீனுவின் நட்புறவு மேலும் ஆழ்ந்ததாகி விட்டது. இந்தியா தான் புத்த மகானின் பிறப்பிடமும் மறைவிடமும் ஆகும். இங்குதான் புத்தமதக் கொள்கைகள் வளர்க்கப்பட்டும் போதிக்கப்பட்டும் வந்தன.

அதனுலேயே இந்தியா எல்லா பௌத்தர்களிடமும் பெருமையும் புகழும் பெற்றது. இவ்வாறு இந்தியா, சீன இவ்விரு நாட்டுப் பெரியார்கள் தமது கருத்துக் களைப் பரிமாறிக் கொள்ளத் தொடங்கினர். சீன யாத்ரீகர்கள் தம் சொந்த நாடு திரும்பும் பொழுது தம்முடன் இந்தியவிக்கிரகங்களையும் சித்திரங்களையும் நூல்களையும் கொண்டு செல்லலாயினர். அவர்கள் தாய் நாடு திரும்பியதும் இந்தியாவைப் பற்றிய வரலாறுகளை எழுதி வைத்தனர். அவற்றிலிருந்து பழங்காலத்தைப் பற்றிய சுவை மிக்க விஷயங்கள் பலவற்றை நாம் அறிய முடியும். இதனுலேயே அயல் நாட்டவர்கள் கண்களில் புராதன இந்தியா எவ்வாறு புலப்பட்டது என்பதை உங்களுக்குக் கூறப் போகிறேன்.



# மெகஸ்தனிஸ் வரலாறு

இந்தியாவிலிருந்து அயல் நாட்டவர்களான கிரேக்கர்களை விரட்டவேண்டும். அதற்காகத் தமது நாட்டு மக்களை ஒன்று சேர்த்த இந்திய வீரர் சந்திர குப்தர் ஆவார். அவர் மகத வமிசம் மறைந்த பின்னர் பெரிய சாம்ராஜ்ஜியத்தை நிறுவினர். சுமார் இருபத்து மூன்று நூற்ருண்டுகளுக்குப் பிறகு நாம் தெரிந்து கொள்ள இயன்றது. அக்காலத்திய கிரேக்கர்கள் எழுதி வைத்தவற்றிலிருந்து மிகுந்த அளவுக்குத் தெரிந்து கொள்ள இயன்றது. தலை நகரைப் பற்றியும் அரசரின் அரண்மனையைப் பற்றியும் மெகஸ்தனிஸ் ஒரு சிறந்த விளக்கம் தந்திருக்கிருர். மௌரிய சாம்ராஜ்யத்தின் நடை முறையில் இருந்த அன்ருட நிர்வாக முறைகளைப் பற்றி விளக்கியிருக்கிருர். மக்களின் பழக்க வழக்கங் களைப் பற்றியும் கூறியிருக்கிருர். அந்த நூலின் பெயர் 'இண்டிகா,' இப் புத்தகம் இன்று கைக்குக் கிடைக்க வில்லை. ஆனல் பிற்கால கிரேக்க ஆசிரியர்கள் அவரைப் பின்பற்றி வரலாறு எழுதி வைத்திருந்தனர். அவற்றிலிருந்து மெகஸ்தனிஸ் என்ன கண்டார் என்பதையும் என்ன விதமான குறிப்புக்களைக் கூறினர் என்பதையும் அறியலாம்.

மெகஸ்தனிஸ் கூறுகிருர் : இந்தியாவில் பெரியனவும் சிறியனவுமாக பல ராஜ்யங்கள் இருந்தன. இவற்றில் மகதம்தான் மிகப் பெரியது.

மகத நாட்டு அரசருக்கு ஒரு லட்சம் படைவீரர்கள் இருந்தனர். 30,000 குதிரை வீரர்கள் இருந்தனர். 5000 யானைகளும் இருந்தன. பல போர்த் தேர்களும் படகுகளும் இருந்தன.



இந்தியாவின் செல்வம் மிகுந்திருந்தது. தலை நகரமும் நாடும் மிகவும் வனப்புடையன. வியப்பிற் குரியன. ஆயுதம் தாங்கிய பெண்கள் படை இருந்தது. அரசரே வழக்குகளை விசாரித்தார். நிர் வாக அலுவல்களில் பெரும் பொழுதைக் கழித்தார். இந்தியாவின் மேற்குப்புற எல்லையிலிருந்து ஒரு பெரிய சாலை சென்றது. அது தலைநகரான பாலிம் போத்ராஸ் அல்லது பாடலீபுத்திரம் வரை சென்றது. கங்கை, சோனு ஆகிய இரண்டு நதிகள் சேருமிடத் தில் தலைநகர் அமைந்திருந்தது. இத்தலைநகரம் பதினுெரு மைல் நீளமும் இரண்டு மைல் அகலமும் உடையது. அதைச் சுற்றிலும் உயர்ந்த மரச் சுவர் கள் இருந்தன. வாயிற்படியில் ஆயுதம் தாங்கிய படை வீரர்களின் சிறிய அணிகள் இருந்தன, கோட்டையின் வெளிப்புறத்தில் நீர் நிறைந்த பெரிய அகழி ஒன்று இருந்தது. அரசரின் அரண்மனை பார்ப்பதற்கு உரியது. மரத்தால் செய்யப்பட்டுப் பலவேறு வேலைப்பாட்டுடன் அலங்கரிக்கப் பட்டி ருந்தது. கும்ரஹார் என்னும் இட த்தில் திரு ஸ்பூனர் என்பவர் சிதைந்த மண்மேட்டைத் தோண்டினுர். அது இந்த அரண்மனை இருந்த இடமாகக் கருதினர். அவர் அகன்ற மரப் பாலத்தைக் கண்டு பிடித்தார். மெகஸ்தனிஸ் மேலும் கூறுகிருர். இந்நாட்டில் ஆண்டு தோறும் இருமுறை பருவமழை பொழிந்தது. அத்துடன் பெரிய நதிகளில் தண்ணீர்க் குறைகிடை யாது. நி ல ம் வளம் மிகுந்திருந்தது. அதனுல் இரண்டு போகம் பயிரிடமுடிந்தது. இந்நாட்டில் பஞ்சம் என்பதே தெரியாது. இரண்டு அரசர்கள் ஒருவரோடு ஒருவர் போரிடலாம். அதனுல் மக்களும் விவசாயிகளும் எந்தக் குறையும் அடையவில்லை.

கொலை, கொள்ளைத் தொல்லைகள் ஏதும் இந் நாட்டில் இல்லை. ஒருவர் திருடிவிட்டா ரென்றால், அதற்கு இந்நாட்டில் தனிப்பட்ட தண்டனை ஒன்று உண்டு. குற்றவாளியின் கை கால்களைத் துண்டித்து விடுவதுதான் சட்டம். மற்றொருபுறம் எண்ணற்ற ஒற்றர்கள் மாறுவேடத்தில் சுற்றி வருவார்கள். மொத்தத்தில் இந்தியர்கள் தாராள மனப்பான்மை யுள்ளவர்கள். பெருந்தன்மையும் உண்மையும் மிக்க வர்கள். வழக்குத் தகராறுகளில் ஈடுபட மாட்டார்கள். பிறர் பொருளைக் கவரவும் மாட்டார்கள். இவ்வாறு மெகஸ்தனிஸ் இந்தியர்களின் நடத்தையைப் புகழ் கிறார். அவர் மேலும் கூறுகிறார். இந்தியர்கள் எவரை யும் அடிமையாக வைத்துக் கொள்ள மாட்டார்கள். இந்தச் செய்தி மட்டும் முற்றிலும் சரியல்ல. ஆனால் இந்தியர்கள் சுதந்திரப் பிரியர்கள். இவை மெகஸ்தனிஸின் வரலாற்றுக் குறிப்பிலிருந்து நன்கு தெளிவாகின்றன.

இந்திய மக்களைப் பற்றி மேலும் பலவற்றை மெகஸ்தனிஸ் கூறி யிருக்கிறார். இந்தியா ஒரு பரந்த நாடு. எண்ணற்ற மக்கள் வாழ்கின்றனர். பலவேறு இனத்தைச் சேர்ந்த பலவகை மக்கள் வாழ்கின்றனர். இந்திய நாட்டின் நாடோடி மக்கள் இந்நாட்டவ ரல்லர். அவர்களில் அயல்நாட்டிலிருந்து முதலில் வந்தவர் யார் என்று சொல்ல முடியவில்லை.

இந்தியர்கள் பலம் பொருந்தியவர்கள். உயர மான தோற்றம் உடையவர்கள். உயிரினம் வாழ் வதற்குத் தேவையான பொருள்கள் இந்தியாவில் மிகுந்துள்ளன. அதனாலேயே அவ்வாறு உள்ளனர்.

இந்நாட்டு நீர் மிகச் சிறந்தது. ஆரோக்கியத்துக்கு உகந்தது. ஆரம்பத்திலிருந்தே இந்தியர்கள் பழங்கள் காய் கறிகளில் விருப்பமுடையவர்கள். தேவைக்கு ஏற்ப, போர்க்கலைகளிலும் தொழில்களிலும் தேர்ச்சி பெற்றவர்கள். நாளடைவில் உடல் உழைப்பிலும் தொழில் நுணுக்கத்திலும் திறமை மிக்கவராயினர்.

டியோனஸஸ், ஹெராக்ளிஸ் என்ற இருவரும் மத சம்பந்தமான தெய்வங்கள். இவர்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது கூறுகிறார்: இந்திய நாகரிகத்தின் ஆரம்பகாலம். அப்பொழுது டியோனஸஸ் மேற்கிலிருந்து இந்நாட்டை அடைந்தார். ஒரு பெரிய படைக்குத் தலைமை தாங்கி வந்தார். அக்காலத்தில் மக்கள் கிராமங்களில் வசித்தனர். நல்ல ஆயுதம் தாங்கிய படையுடன் டியோனஸஸ் நாடு முழுமையும் வென்றார். இவர்தான் இந்தியர்களுக்குப் போர்க்கலையை முதன் முதலாகக் கற்பித்தார். படை வீரர்களின் ஒழுங்கு முறையைப் புகுத்தினார். நீதிமுறை, சட்ட திட்டங்கள், கடவுள் வழிபாடு ஆகியவற்றை அறிமுகம் செய்தார். இவருடைய ஆட்சிக்குப் பின் இவர் மரபினர் ஆண்டு வந்தனர் தலைமுறை தலைமுறையாக 250 ஆண்டுகள் இந்நாட்டை ஆண்டனர். கடைசியில் அரசுமுறை ஒரு முடிவுக்கு வந்தது. பல நகரங்களில் குடியாட்சி முறை நிறுவப்பட்டது.

ஹெராக்ளிஸ் இந்தியாவில் பிறந்தவர். அவரிடம் மிகுந்த வீரம் இருந்தது. அளவிட முடியாத தனி உடல் பலம் இருந்தது. அவருக்குப் பல மனைவியரும் பிள்ளைகளும் இருந்தனர். ஆனால்

ஒரு பெண்தான் இருந்தாள். அவர் தமது பிள்ளைகளுக்கு நாட்டைச் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தார். மகளுக்குப் பாண்டிய நாட்டை வழங்கினுர். ஹெராக்ளிஸ் பல நகரங்களை நிறுவினுர். அவற்றில் பாடலீபுத்திரம்தான் முதன்மையானது. அவர் இந்நகரைப் பலவழிகளில் அலங்கரித்திருந்தார். அதை அழகுள்ளதாகச் செய்தார். பல அரண்மனைகளையும் கட்டுவித்தார். அரண்களும் அகழிகளும் ஏற்படுத்தி நகரத்தைப் பாதுகாப்புள்ளதாகச் செய்தார். 'சூரசேனம்' என்ற பகுதியில் இருந்த மக்கள் ஹெராக்ளிஸைக் கடவுளாக வழிபட்டனர். சூரசேனத்தில் இரண்டு முக்கியப் பட்டணங்கள் இருந்தன. அவை மதுராவும் கிருஷ்ணபுரமுமாகும். அவற்றினருகில் யமுனை என்ற பெரிய ஆறு ஓடியது. அதில் படகோட்டிகள் படகைச் செலுத்தினர். டியோனஸஸ், ஹெராக்ளிஸ்ஸைப் பற்றி மெகஸ்தனிஸ் கூறியிருக்கிருர். அதன் மூலமாக சிவ, கிருஷ்ண வழிபாட்டைப் பற்றிய குறுப்புகளை உணரலாம் என்று பல அறிஞர்கள் கருதுகின்றனர்.

தேசீயப் பண்பைப் பற்றியும் மெகஸ்தனிஸ் சில குறிப்புகள் வரைந்திருக்கிருர். இந்தியர்களின் சிறப்பான குணங்களையும் கூறியுள்ளார். இந்தியர்கள் ஒழுக்கம், உண்மை, நேர்மையான நடத்தை, நற்பண்பு ஆகியவற்றில் பெயர் போனவர்கள். சந்திரகுப்தரின் நகரப்புறத்தில் மட்டும் நான்கு லட்சம் மக்கள் இருந்தனர். ஆனுல் அன்ருடப் போக்கு வரவு கணக்கில் அடங்காது. இந்தியர்கள் நீதி மன்றங்களுக்குச் செல்ல விரும்புவதில்லை. அடமான சொத்துக்காக வழக்குத் தொடுக்க

மாட்டார்கள். அவர்கள் பணத்தையும் சொத்தையும் வாய் மொழியாக வழங்கினர். முத்திரையிட்ட பத்திரங்களோ சாட்சியங்களோ தேவைப்படவில்லை. அவர்களிடையே மிகுந்த நம்பிக்கை இருந்தது. அவர்களின் வீடுகள், சொத்துக்கள், பணம் முதலியவை பாதுகாப்பின்றியே இருந்தன. இந்தியர்கள் மிக மிக வாய்மையுள்ளவர்கள். எளிமையான நடத்தையுள்ளவர்கள். சாதாரணமான உணவு அருந்துபவர்கள். இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர். அவர்கள் கூட்டமாக வாழ விரும்பவில்லை. மக்கள் கூட்டத்தையும் விரும்பவில்லை. அதனாலேயே அவர்களிடம் அமைதியும் ஒழுக்கமும் சிறந்திருந்தன. அவர்கள் மது அருந்தமாட்டார்கள். சிறப்பான யாகங்கள் விழாக்களில் மட்டும் அருந்தினர். அவர்களுக்கு முக்கியமான பிடித்த உணவு 'சாறு', இது அரிசியுடன் பால் கலந்த ஒரு வகைக் கஞ்சி. அவர்கள் ஆடை அலங்காரத்தில் சிறந்தவர். அதாவது அவர்கள் தங்க ஆபரணங்கள் அல்லது மதிப்பு மிக்க கற்கள் பதித்த வைர ஆபரணங்கள் அணிவதில் மிகவும் விருப்ப முள்ளவர்கள். சிறந்த மஸ்லின் என்னும் மெல்லிய ஆடைகள் அணியவும் விரும்புவர். சாலையில் செல்லும் பொழுது தலைவருக்குப் பின்னால் நின்றவாறு குடை பிடித்துச் செல்லுவர். இந்தியர்கள் உடலை அழகு படுத்தும் கலையில் மிகுந்த கவனம் செலுத்துவர்.

இந்திய சமூகத்தைப் பற்றிய வகையில் மெகஸ்தனிஸ் ஏழு வகுப்புகளை விவரித்திருக்கிறார். தத்துவ ஞானி, விவசாயி, வேடனும் இடையனும், தொழிலாளியும் வர்த்தகனும், ஒற்றன், ஊழியன், என ஏழு வகுப்பினராவர்.

தத்துவ மேதைகள் எண்ணிக்கையில் குறைந்த வர்கள். ஆயினும் அவர்கள்தான் உயர்ந்த நிலைமையை வகிக்கின்றனர். அவர்கள் எவருக்கும் தலைவர்கள் அல்லர். ஊழியருமல்லர். அவர்களுக்கு பொது மக்களின் கடமைகளோ பொறுப்புகளோ இல்லை. யாகம் போன்ற விழாக்களில் முன்னின்று நடத்துவார்கள். ஆண்டு துவங்கும் பொழுது ஜோதிடக் கணக்குகளைப் போடுவார்கள். மக்களுக்கு மழையின்மை, அதிகமழை, இயற்கைக் கோளாறு, கொள்ளை நோய்களைப்பற்றி எச்சரிப்பார்கள். அதற் கேற்ப அந்நாட்டு அரசரும் அவருடைய அதிகாரி களும் முன் கூறப்பட்ட அபாயங்களைப்பற்றி எச்சரிக்கையாய் இருப்பார்கள். இந்தத் தத்துவ மேதைகளில் இருவகையினர் உள்ளனர். ஒரு வகையினர் பிராமணர்கள். மற்றொரு வகையினர் சந்யாசிகள்.

விவசாயிகள்தான் எண்ணிக்கையில் மிகுந்தவர் கள். அரசாங்கத்தில் அவர்களுக்குப் போரிடுவதிலோ மற்ற வேலைகளிலோ பொறுப்பு கிடையாது. எனவே இயன்ற அளவுக்கு அவர்கள் தங்கள் பொழுதை விவசாயத்தில் கழிக்க முடியும். போர்க்காலத்தில் எதிரிகளின் படைகள் கூட அவர்களைத் துன்புறுத் தாது. அவர்கள் தங்கள் வேலையில் ஈடுபட்டிருப் பார்கள். அவர்கள் வெளிப்புறத்தில் வசிப்பார்கள். அதாவது கிராமங்களில் வாழ்வார்கள். பொதுவாக நகரத்துக்கு அருகில் வந்திருக்க மாட்டார்கள். அவர் கள் தமது நிலங்களுக்கான நிலவரியை அரசருக்குச் செலுத்துவர். டியோட்ரஸ் என்னும் இன்னொரு கிரேக்க ஆசிரியர் கூறுகிறார் : மொத்த விளைவில் நான்கில் ஒரு பங்கு நிலவரியாகச் செலுத்தப்படும்.

ஆனுல் விசேஷ ஏற்பாடுகளுக்கென அரசருக்குத் தனி உபரி நிலவரி செலுத்தும் வழக்கமும் இருந்தது. ஸ்டிராபோ என்னும் மற்ருெரு கிரேக்க ஆசிரியர் கூறுகிருர்: விவசாயிகள் அறுவடையில் நான்கில் ஒரு பங்கு மட்டுமே அரசரிடமிருந்து தங்கள் கூலியாகப் பெற்று வந்தனர். ஆரியான் என்னும் மூன்ருும் ஆசிரியர் ஒருவர் நிலவரிச் சம்பந்தமாகத் தனியாக ஏதும் குறிப்பிடவில்லை. விவசாயிகள் அரசருக்கும் தனிப்பட்ட நகரங்களுக்கும் நிலவரி செலுத்தி வந்தனர் என்று சுருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிருர்.

வேடர்களும் இடையர்களும் நாடோடிகளாயிருந்தனர். இடத்துக்கு இடம் பிரயாணம் செய்தனர். அவர்கள் நகரங்களிலும் வசிக்கவில்லை. கிராமங்களிலும் வசிக்கவில்லை. ஆனுல் கூடாரங்களில் வசித்தனர். பயங்கர விலங்குகளின் கொடுமையிலிருந்து நாட்டைக் காத்தனர். கொடிய பறவைகள் விஷ ஜந்துக்களிலிருந்தும் காப்பாற்றினர். அவர்களும் ஒருவகையான வரியைச் செலுத்தினர். அது பணமாகவோ அல்லது பொருளாகவோ அல்ல. கால்நடைகளாகச் செலுத்தினர்.

தொழிலாளர்கள் அல்லது கைத்தொழில் செய்வோர் யுத்த தளவாடங்களைச் செய்வது வழக்கம். மேலும் குடும்பத்துக்குத் தேவையான பொருள்களையும் செய்வர். அவர்கள் வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தனர். அதுமட்டுமின்றி அவர்கள் அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து ஒழுங்கான பண உதவி பெறலாயினர். டியோட்ரஸ் என்பவர் இவ்வாறு கூறியிருக்கிருர். ஆனுல் ஆரியான் கூறுகிருர்: ‘அவர்

களும் ஒருவகையான வரி செலுத்தினர். அவ்வரி உழைப்பதாலும் கருவிகள் உற்பத்தி செய்வதாலுமா கும். ஆயினும் போர்க் கருவிகள் செய்த தொழிலா ளர்கள் அரசாங்க நிதியைக் கொண்டு ஆதரிக்கப் பட்டனர். கடற் படையில் வேலை செய்பவர்களும் அவ்வாறே ஆதரிக்கப்பட்டனர்.

எண்ணிக்கை அளவில் விவசாயிகளுக்கு அடுத்தாற்போல் படை வீரர்களுக்குத்தான் இடம் அளிக்க வேண்டும். இப்பகுதியினரிடம் காணப் பட்ட ஒழுக்கமும் சட்டதிட்டமும் குறிப்பிடத்தக்க தாகும். படை வீரர்கள் ஆயுதம் தாங்கி இருப்பர். சமாதான காலத்தில் அவர்கள் பயனுள்ள வேலை எது வும் செய்யமாட்டார்கள். அவர்கள் சோம்பலுடன் வேடிக்கைகளில் பொழுதைக் கடத்தினர். படையின் முக்கிய பிரிவுகளாகத் தரைப்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை ஆகியவை இணைந்திருந் தன. இருக்கும் படையின் எல்லாச் செலவுகளும் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப் பட்டன.

ஒற்றர்களின் வேலை செய்தி சேகரிப்பதாகும். அவர்கள் செய்திகளைத் திரட்டி அரசருக்குத் தெரி விப்பர். அல்லது உயர்தர அதிகாரிகளுக்குத் தெரி விப்பர்.

அரசவைப் பெருமக்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள். அவர்கள் தமது நடத்தை, அறிவுத் திறமை, செயலாற்றல் ஆகியவற்றால் சமூகத்தில் மிக உயர்ந்த மதிப்பைப் பெற்றிருந்தனர். இந்தக் குழுவினரிலிருந்துதான் ராஜப் பிரதிநிதி, மந்திரி, மெய்ப்பாதுகாப்பாளர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்

பட்டனர். பொக்கிஷதார், பிரதமநீதிபதி, சேனைத் தலைவர் உட்படவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

இந்த வெவ்வேறு வருணத்தவரிடையே கலப்பு மணம் செய்வது கிடையாது. ஒருவர் தமது சொந்தத் தொழிலை விட்டு விடுவது சமூக வழக்கத் திற்குப் புறம்பானது. அவ்வாறே இன்னொரு வருணத்தவரின் தொழிலைச் செய்வதும் புறம்பான தாகும்.

பாடலீபுத்திரத்தின் அரசாங்க நிர்வாகத்தைச் சம்பந்தப்பட்ட அளவில் மெகஸ்தனிஸ் கூறியிருக்கி றார் : மூன்று வகையான அரசாங்க அதிகாரிகள் இருந்தனர். கடைகளையும், வர்த்தகக் கூடங்களையும் மேற்பார்வையிடுபவர்கள், நகரங்களின் பொறுப்பை அளிக்கப்பட்டிருப்பவர்கள், படையைக் கவனித்துக் கொள்பவர்கள் என மூன்று வகையினர்.

இவர்களில் இரண்டாவது வகையினர் பொறுப் புள்ள வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் ஆறு சபையினர் அல்லது சங்கத்தினராகப் பிரிக்கப் பட்டிருந்தனர். முதல் சபையினர் தொழில் துறைகளில் ஈடுபட்டிருந்தனர். இரண்டாம் சபை யினர் அந்நியர்களைக் கவனித்து வந்தனர். மூன்றாவது பிறப்பு இறப்புக் கணக்குகளை வைத்து வந்தது. நான்காவது கைத்தொழில்களையும், உற்பத்திகளையும் நிர்வகித்து வந்தது. ஐந்தாவது வர்த்தகப் பொருள்களையும் வியாபாரத்தையும் கவனித்தது. ஆறாவது விற்பனைச் சரக்குகளுக்கு விற்பனை வரி வசூலித்து வந்தது. மிக முக்கியமான அலுவல்கள் இந்த ஆறு சபைகளின் ஒருமித்த முயற்சியால் செயல் படுத்தப்பட்டு வந்தன. ஐந்து

அங்கத்தினர்களை நியமிக்கும் வழக்கம் நமது புராதன பஞ்சாயத்து முறையிலிருந்து தோன்றியதேயாகும். இவ்வாறு அறிஞர்கள் அபிப்பிராயம் தெரிவிக் கின்றனர்.

இந்தியாவின் பொருளாதார நிலைமையைப்பற்றி மெகஸ்தனிஸ் கூறுகிறார்: இந்தியர்கள் அசைக்க முடியாத பிறவிச் சுதந்திரத்தைப் பெற்றிருந்தனர். இதில் ஒருவரும் தலையிட மாட்டார்கள். எந்தச் சூழ் நிலையிலும் ஒருவர் அடிமையாக்கப்படமாட்டார். அடிமைகளை வைத்துக் கொள்ளுதல் இந்தியச் சமூக ரீதியில் அனுமதிக்கப்படுவதில்லை.

இந்தியாவுக்குப் பஞ்சம் என்பதே தெரியாது. நாடு பசுமையான பயிர் நிலங்கள் சூழ்ந்திருந்தது. நாடு முழுமையும் நெற் பயிரும் செல்வமும் நிறைந் திருந்தன. மண் மிகுந்த வளமுடன் இருந்தது. ஆண்டுதோறும் இந் நாட்டில் இருமுறை மழைக் காலம் வரும். மாரிக் காலத்தில் மழை பொழியும். அப்பொழுது கோதுமை, பார்லி, பயறு வகைகள் விதைக்கப்படும். இரண்டாவது முறை கோடையில் மழை பொழியும். அப்பொழுது நெல், சோளம் போன்ற இதர தானியங்கள் விதைக்கப்பட்டன. எனவே ஒவ்வொரு ஆண்டிலும் இரண்டு போகம் வயல்களில் அறுவடை செய்யப்பட்டு வந்தது. இந் நாட்டின் மண் மெதுவாயும் ஈரமாயும் இருந்தது. ஆற்றுப் பாய்ச்சலாலும் மழையினாலும் நிலங்களில் ஏராளமான பயிர்கள் விளைந்தன. மேலும், இந்நாட்டில், வானிலை வெப்ப தட்பம், பழங்களும் காய்கறிகளும் எளிதில் விளையும் வண்ணம் இருந்தன. உணவுப் பற்றுக் குறையை அறிந்ததே யில்லை.

தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, மேலும் தகரம் ஆகிய உலோகங்கள் இந்தியாவின் முக்கிய உலோகச் செல்வமாகும். இந்த உலோகங்கள் அன்ருட வாழ்க்கைக்கான குடும்பச் சாமான்கள் செய்யப் பயன் பட்டன. பலவகையான அணிகலன் களும் யுத்த தளவாடங்களும் செய்யப் பயன் பட்டன.

இந்தியா ஆற்று நீரால் பாசனம் பெறுகிறது. இந்நாட்டு நதிகள் மிகப் பிரம்மாண்டமானவை. ஆற்றின் ஆழத்தைக் காண்பதும் கடினமாகும். கங்கையும் சிந்துவும் மிகப் பெரியவை. அவை நன்கு பெயர் பெற்றவை, கிளை நதிகளையும் உபநதிகளை யும் கணக்கிட்டால், கங்கைக்குப் பதினைந்து நீர் வழிகளும் சிந்துவுக்குப் பதினென்றும் உள்ளன. இத்துடன் வேறு பல சிற்ருறுகளும் ஆறுகளும் இருக்கின்றன. அவை ஆண்டு முழுமையும் நீர் பாயும். அவற்றின் வழியே எப்பொழுதும் படகுகள் செல்லலாம். மழை யூற்றும், ஆற்று வெள்ளமும் தொழில் துறையினரால் நிறுவப்பட்ட நீர்ப்பாசன அமைப்பும் இந்நாட்டின் நிலத்தை எப்பொழுதும் வளமுள்ளதாக்கியிருக்கின்றன.



# பா ஹியான் வரலாறு

இந்தியாவுக்கும் சீனுவுக்கும் இடையே உள்ள உறவு மிகப் பழமையானது. சீனுவின் அறிஞர்களும் சாதுக்களும் இந்தியாவுக்கு யாத்திரையாக வருவது வழக்கம். குப்த வமிசத்து அரசர் இரண்டாம் சந்திர குப்தர் அரசாண்டார். அவர் காலத்தில் பா ஹியான் என்ற பெயருள்ள புத்த யாத்திரீகர் இந்தியாவுக்கு வந்தார். அவர் சில ஆண்டுகள் இங்கு தங்கியிருந்தார். பல இடங்களையும் தரிசித்தார். பலவற்றையும் கவனத்துடன் ஆராய்ந்தறிந்தார். பிறகு அழகான வரலாற்றை எழுதினுர். அதிலிருந்து நாம் நிறையத் தெரிந்து கொள்ள முடியும்.

பா ஹியான் சீனுவிலிருந்து நிலமார்க்கமாக இந்தியாவுக்கு வந்தார். மீண்டும் கடல் மார்க்கமாகத் திரும்பிச் சென்றுர். பா ஹியான் கூறுகிறுர்: அந்நாட்களில் இந்தியக் கப்பல்கள் கடல் பிரயாணம் செய்தன. அந்தக் காலத்தில் நாட்டின் நிலைமையும் மிகவும் சிறப்பாயிருந்தது. அரசருக்கு அரசாங்க நிலங்களிலிருந்து நிலவரி மூலமாக ஏராளமான வருமானம் கிடைத்தது. மேலும் அந்நாட்களில் நிலவரிச் சுமை மிகவும் எளிதாக இருந்தது. பொருள்களும் விலை மலிவாய் இருந்தன. எனவே, மக்கள் அமைதியாகவும் மகிழ்வுடனும் வாழ்ந்தனர். நல்ல அரசாங்கம் இருந்ததனுல் திருடர்கள் அபாயம் கிடையாது. சாலைகளில் வழிபறிக் கொள்ளைக்காரர்கள் கிடையாது.

மக்களின் நன்மைக்கென அரசர் தருமசத்திரங் களையும், மடங்களையும் அமைத்தார். மௌரியர் காலத்தில் இருந்ததைப்போல சட்டங்களும், தண்டனைகளும் மிகவும் கொடுமையாய் இல்லை. அபராதம் செலுத்திவிட்டால் குற்றவாளி பிரம்படித் தண்டனையிலிருந்துத் தப்ப முடியும். மரண தண்டனை அல்லது கை கால்களைத் துண்டித்து விடுதல் ஆகியவை நடைமுறையில் இல்லை. அக் காலத்தில் பாடலீபுத்திர நகரத்தில் பெரிய வைத்திய சாலை ஒன்று இருந்தது. அந்நகரத்தின் செல்வந்தர் கள் அதன் செலவுக்குப் பணம் வழங்கினர். நாட்டின் பல்வேறு இடங்களில் அநேகக் கோயில் களும் புத்த விஹாரங்களும் கட்டப்பட்டன. தலை நகரத்தில் ஆண்டுதோறும் பெரிய பண்டிகைக்காக விழா கொண்டாடப்பட்டது. அந்தச் சமயத்தில் தெய்வ விக்கிரகங்கள் ரதத்தில் வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

மதுரா, மகதம் ஆகிய இரண்டு இடங்களின் செல்வச் சிறப்பு பா ஹியானைக் கவர்ந்தது. பாடலீ புத்திரத்தின் பழைய மௌரிய அரண்மனைகளின் அழகையும் அலங்காரத்தையும் பார்த்து அவர் வியப்படைந்தார். பா ஹியான் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் மகதத்திலும், வங்காளத்திலும் தங்கி யிருந்தார். எனவே இந்த இடங்களின் சமூக நிலைமை, மதம், பழக்கவழக்கங்களைப்பற்றி நன்கு கவனித்து வந்தார். அவர் கூறினர் : தீண்டாதவர்கள் அல்லது தாழ்ந்த வகுப்பு மக்கள்தான் பிராணிகளைக் கொல்லும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். அக்காலத் தில் அவர்கள் நகரங்களுக்குள் செல்லமாட்டார்கள்.

ஆனால் அவர்கள் நகரத்துக்கு வெளியில் வசித்தனர். நகரத்துக்குள் செல்லும்பொழுது அவர்கள் கோல்களால் ஒன்றேடொன்று அடித்து ஒருவகையான ஒலியை உண்டாக்கினர். அதனால் மக்கள் தூர விலகிவிடுவார்கள். அந்நாட்களில் இந்திய மக்கள் கப்பல் ஓட்டினர். கடலுக்கு அப்பாலுள்ள நாடுகளுக்கும் சென்றனர். வங்காளத்தில் தாமிரலுப்தா (தாம்லூக்) ஒரு பெயர் பெற்ற துறைமுகமாகும். அந்நாட்களில் அது கல்வியின் இருப்பிடமாய் இருந்தது, இங்கிருந்துதான் வர்த்தகத்திற்கு கிழக்கிலும் தெற்கிலும் சென்று கொண்டிருந்தனர். இலங்கை, பர்மா, மலேயா, கம்போடியா போன்ற மற்ற இடங்களுக்கும் வியாபாரிகள் சென்றனர். பா ஹியான் இந்தத் துறைமுகத்திலிருந்துதான் கப்பலேறினுர். இலங்கையையும், ஜாவாவையும் பார்த்துவிட்டுக் கடல் மார்க்கமாகச் சீனுவுக்குச் சென்றுர்.

சம்பிரதாயம், இலக்கியம், நுண்கலே ஆகியவற்றைப் பற்றிய பா ஹியானின் குறிப்புக்கள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை. அக்காலத்தில் ஹிந்து மதம் அல்லது பிராமணீயம் இந்தியாவில் சிறந்திருந்தது. ஹிந்துக்கள் பல தெய்வங்களேயும் பக்தியோடு தொழுதனர். வைசாலி, கயா போன்ற பௌத்த நகரங்களில் கண் கூடாக மக்கள் குறையலாயினர். ஆனல் பௌத்த சமயம் அழியாமல் இருந்து வந்தது. ஹிந்து அரசர்கள் சகிப்புத் தன்மை யற்றவர்கள் அல்லர். ஹிந்துக்கள் பௌத்தர்கள் ஆகிய இருவரும் அடுத்தடுத்து வாழ்ந்தனர். மேலும் ஓரினத்தவர் மற்ருேர் இனத்தவரையோ மதத்தையோ பழித்துக் கூற மாட்டார்கள்,

இந்நாட்டு மக்கள் அன்பும் பெருந்தன்மையும் மிக்கவர்கள். இவ்வாறு பாஹியான் கூறுகிருர். அஹிம்சையின் பெருமையை அவர்கள் அறிந்திருந் தனர். ஓரிடத்திலிருந்து மற்ருேர் இடத்துக்குச் சுதந்திரமாகச் செல்வர். அனுமதி ஏதும் தேவை யில்லே. சட்டத்தில் கண்டிப்பும் கிடையாது.



# யுவான் சுவாங் வரலாறு

ஏறத்தாழ பதின் மூன்று நூற்றுண்டுகளுக்கு முன்னர் வடஇந்தியாவில் புகழும் வல்லமையும் வாய்ந்த அரசர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் ஹர்ஷவர்த்தனர். அவரைப் பற்றிச் சேகரித்த வரலாற்றின் பெரும்பகுதி யுவான் சுவாங்கினுல் எழுதப்பட்டதாகும். இந்தச் சீன யாத்திரீகரின் விரிவான விஷயத் தொகுப்புப் படிப்பதற்கு உற்சாகம் மிக்கதாகும்.

யுவான் சுவாங் சீனுவில் ஒரு மதிப்புள்ள குடும்பத்தில் பிறந்தார். அவர் பௌத்த யாத்திரை ஸ்தலங்களைத் தரிசிப்பதற்கெனத் தமது நாட்டை விட்டு வந்தார். புத்த மதக் கொள்கைகளைக் கற்பதற்கும் வந்தார். அந்நாட்களில் அயல் நாடுகளுக்குச் செல்வது சீனுவின் சட்டத்துக்குப் புறம்பானதாகும். எனவே அவர் ரகசியமாக நாட்டைவிட்டு வந்தார். ஆனுல் அவர் பிடிபட்டார். ஆயினும் எப்படியோ சிறையிலிருந்து தப்பித்துக் கொண்டார். வழியில் கோபி எனப்படும் பாலைவனம் இருந்தது. அங்கு அவர் வழி தவறி விட்டார். பயங்கரமான தடுமாறும் மணல் வெளியில் அடையாளமே தெரியவில்லை. அவ்வெளியைக் கடந்து செல்வது மிகமிகக் கடினமாயிருந்தது. மனிதர்கள் மிருகங்கள் ஆகியவற்றின் எலும்புக் கூடுகளைக் கண்டார். மிக்க சிரமத்துடன் வழியைக் கடந்தார். வழி தடுமாறி விட்டதாலும், தாகத்தைத் தணிக்கத் தண்ணீர் இல்லாமையாலும் அவர் மிகவும் துன்பமான நிலையில் இருந்தார். அவருடைய சக பிரயாணிகள் பனி யாற்றில் மூழ்கி உறைந்தனர். தம் உயிரிழந்தனர்.


சீனாவும் இந்தியாவும்
சைபீரிய சமவெளி
சமர்கண்ட்
பெர்ஸியா
புருஷபுரம்
திபெத்
ஹிமாலய
இந்தியா
ஜப்பான் கடல்
வங்காளக் கடல்

சீனாவும்
இந்தியாவும்

இறுதியில் மிக்க சிரமத்துடன் புதிய சீனத் துருக்கியான டியென் சானை அடைந்தார். இப்பகுதியின் துருக்கியச் சக்கரவர்த்தியைக் 'கான்' என்று அழைத்தனர். அவர் சீன யாத்திரீகரை மிகவும் உபசாரத்துடன் வரவேற்ருர். தலைநகரம் நன்கு அலங்கரிக்கப்பட்டது. அவரைக் கௌரவிப்பதற்காக இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. 'கான்' விலையுயர்ந்த ஆடைகளை அணிந்து அலங்கரித்துக் கொண்டிருந்தார். ஒரு கூடாரத்தினுள் (சிங்காதனத்தில்) காத்திருந்தார். நண்பர்களுடனும் அரசவைப் பெருமக்களுடனும் இருந்தார். யுவான் சுவாங் வந்ததும், 'கான்' முப்பது அடிகள் முன்வந்து கற்றறிந்த விருந்தினருக்கு மரியாதை தெரிவித்தார். பிறகு அவர் மிகுந்த மரியாதையுடன் கூடாரத்துக்குள் அழைத்துச் செல்லப்பட்டார். அரிசியில் செய்த பட்சணம், பாலாடை, தேன் மற்ற உணவு வகைகளுடன் விருந்தளிக்கப்பட்டது. புத்த மதத்தின் முக்கியக் கொள்கைகளை யுவான்சுவாங் பேரரசருக்கு விவரித்தார். போதனையும் செய்தார். அவர் சிரசுக்குப் பாதுகாப்பாகக் குடை அளிக்கப்பட்டிருந்தது. பக்த சீடர்களில் மொழி பெயர்ப்பாளர்களும் இருந்தனர். அவர்களுடன் சாமர்கண்டை அடைந்தார். அப்பொழுது இந்நகரம் மத்திய ஆசியாவின் வர்த்தக ஸ்தலமாயிருந்தது. இங்குச் சிறந்த தரமுள்ள அழகான குதிரைகள் விற்கப்பட்டன. கையால் செய்யப்பட்ட மிகச் சிறந்த பொருள்கள் விற்கப்பட்டன.

இவ்வாறு ஓரிடத்திலிருந்து மற்ருேரிடமாகச் சென்ருர். பிறகு காந்தார நாட்டிற்கு வந்தார்.

இந்தியாவுக்கு வந்ததும் பேரரசர் ஹர்ஷவர்த்தனரிடம் மிகுந்த அன்பும் நட்பும் கொண்டார். அதை விருத்தியும் செய்தார். அவர் நாட்டில் எட்டு ஆண்டுகள் தங்கினுர். மொத்தம் பதினுறு ஆண்டுகள் அயல் நாட்டில் தங்கியிருந்தார். பிறகு தாய்நாடு திரும்பினுர். அவர் இந்தியாவை விட்டுச் செல்லும் பொழுது பல மதிப்புள்ள நூல்களையும் கையெழுத்துப் பிரதிகளையும் தம்முடன் எடுத்துச் சென்ருர். வண்ணச் சித்திரங்கள், தங்கம், வெள்ளி, சந்தன மரம் ஆகியவற்ருல் செய்த புத்த விக்கிரகங்களையும் எடுத்துச் சென்ருர். அவர் தாய்நாடு திரும்பியதும் அப்பொழுது இருந்த சீனப் பேரரசர் அவரை மிக்க மரியாதையுடன் வரவேற்ருர்.



யுவான் சுவாங்

யுவான் சுவாங்கின் வரலாறு "சி. யூ. கி." எனப்பட்டது. இவ்வரலாற்றிலிருந்து மதிப்பு மிக்க அறிவுரைகளை நாம் பெறுகிருேம். ஏழாம் நூற்ருண்டில் இந்தியாவின் மதம், சமூக நிலைமையைப்

பற்றியும் அறிகிறோம். வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் இருந்த சில குறிப்பிட்ட அரசுகளில் இருந்த நிலைமைகளையும் தெரிந்து கொள்கிறோம். யுவான் சுவாங் ஒரு பெரிய அறிஞர். சாந்த குணத் திற்குப் பெயர் போனவர். எனவே அவர் புத்த சமயத்தைப் பற்றி அறிந்து கொள்ளும் முதல் நோக்கத்துடன் இந்தியாவுக்கு வந்தார். அதை அனுசரிக்கும் கொள்கைகளை அறியவும் இங்கு வந்தார். இந்த லட்சியத்தை மனத்தில் கொண்டு அவர் நேப்பாளத்திலிருந்து இலங்கை வரைச் சுற்றுப் பயணம் செய்தார். பதினான்கு ஆண்டுகள் சுற்றினார். இந்தியாவைப் பற்றிச் சரியான வரலாறு என்று ஒப்புக் கொள்ளத்தக்க விஷயங்களைக் குறித்துக் கொண்டார். பதின் மூன்று நூற்றாண்டு களுக்கு முன் இந்தியர்கள் இருந்த நிலைமையையும் குறித்து வைத்தார்.

# மதமும் கல்வியும்

ஹர்ஷருடைய ஆட்சிக் காலத்தில் இந்து மதமும் புத்த மதமும் அடுத்தடுத்து வளர்ச்சி யுற்றிருந்தன. யுவான் சுவாங் கூறியிருக்கிருர்: இந்தியா பிராமணர்கள் நாடு. இவ்வாறு அயல் நாட்டவர்களுக்குத் தெரிந்திருந்தது. கற்றவர் களிடையில் 'தேவபாஷை'யான சமஸ்கிருதம் பெரும்பாலும் வழக்கத்தில் இருந்தது. பெயர் பெற்ற பௌத்த அறிஞர்களிடமும் இம்மொழி வழக்கத்தில் இருந்தது. இந்தியாவில் பலவகை இனங்கள் இருந்தன. ஒன்ருேடொன்று இயைந்த ஒருமைப்பாடு காணப்படா விட்டாலும் ஒரு இனம் மற்ருென்றைத் தாழ்த்தவில்லை. நாட்டின் நடுப்பாகத்தில் இருந்த மக்கள் கண்ணியமானவர் கள். மிகவும் நாகரிகமடைந்தவர்கள். அவர்கள் கல்வி, தன்னடக்கம் ஆகியவற்றின் மதிப்பை உணர்ந்திருந்தனர். புத்த மதத்தின் சிறப்பான நாட்கள் கடந்து விட்டன. பாடலீபுத்திரம், சிரவாஸ்தி முதலியன பௌத்த மத காலத்தில் பெயர் பெற்ற நகரங்கள். அவை சிதைந்து காடு சூழ்ந்து விட்டன. அயலார் படையெடுப்பும் மக்களிட மிருந்த பொறுப்பில்லாமையும் இவ் விடங்களின் பெருமையைப் பறித்துக் கொண்டு விட்டன. ஆயினும் புராதன சிறப்பை முற்றிலும் இழந்து விடவில்லை. எனினும் ஏறத்தாழ 5000 பௌத்த மடங்கள் இந்தியா முழுவதும் பரவியிருந் தன. அவை காஷ்மீரம், ஜலந்தர், கன்னியா

குப்ஜம், வைசாலி, புத்த கயா ஆகிய இடங்களில் இருந்தன. இன்னும் பிற இடங்களிலும் இருந்தன. அம்மடங்களில் பல புத்த பிக்ஷுக்களும் மேதைகளும் வசித்து வரலாயினர். அவர்கள் இலக்கியக் கலைகளிலும் மத சம்பந்தமான காரியங்களிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். யுவான் சுவாங்கின் குறிப்புப்படி அவர்களின் எண்ணிக்கை இரண்டு லட்சத்துக்கும் அதிகமாயிருந்தது.

# நளந்தா

பீஹாரில் மிகப் பெரிய கல்விக் கூடம் ஒன்று இருந்தது. அது நளந்தா நகரில் இருந்த ஒரு பௌத்த விஹாரத்தில் இருந்தது. அந்த விஹாரத்தில் மாணவர்கள் திறமைமிக்க பௌத்த போதகர்களாலும் மேதைகளாலும் போதிக்கப் பட்டனர். அவர்களுடைய போதனையின் சிறப்பு பல்வேறு நாடுகளுக்கும் பரவலாயிற்று. சீனா, துருக்கி போன்ற தொலைவான நாடுகளிலிருந்தும் மாணவர்கள் கூட்டம் கூட்டமாக வந்தனர். யுவான் சுவாங் வந்திருந்த காலத்தில் நளந்தாவின் மாணவர்கள் எண்ணிக்கை பத்தாயிரமாகும். கல்வி போதனை,




நளந்தா சர்வ கலாசாலை

உணவு, இருக்கை ஆகியவை இலவசமாகும். இந் நாட்டின் ஆறு அரசர்களும் மற்ற செல்வந்தர்களும் இம்மாணவர்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தனர்.

நளந்தாவின் சிதைந்த இடத்திலிருந்து விஹார ரத்தின் பழைய கட்டடங்களும், கல்விக் கூடமும் தற்காலத்தில் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. புதை பொருள் ஆராய்ச்சிப் பொருள்கள் ஒரு பரந்த கிராமத்தையே அடைத்துக் கொண்டிருந்தன. எண்ணற்ற உருவச் சிலைகளும் மண்மேடுகளும் கண்டு பிடிக்கப்பட்டன. புத்த விஹாரம் ஆறு அடுக்கு மாளிகையாக இருந்திருக்கும் என்று கூறப்படுகிறது. மூன்ரும் அடுக்கு வரையில் உள்ள மாடி இன்றும் நல்ல நிலையில் இருக்கிறது.

நளந்தாவில் மாணவர்கள் கடுமையான ஒழுக்க வாழ்க்கையை நடத்தினர். இந்தப் பல்கலைக் கழகத் தின் லட்சியம் மதபோதனைகளைப் பற்றிய விவாதம் நடத்துதலாகும். கல்விக் கூடத் தலைமை யாசிரியரிடம் பயபக்தியுடன் இருக்க வேண்டும். நேர்மையையும் தூய்மையையும் பின் பற்ற வேண்டும். நளந்தா பல்கலைக் கழகத்திற்குச் சொந்த வருவாயும் இருந்தது. அரசர் ஹர்ஷவர்த்தனரே மற்ற அரசர்களுடன் விஹாரம், பல்கலைக் கழகம் ஆகியவற்றின் செலவுக்குப் பொருள் வழங்கி வந்தார். போதனைகளைக் கேட்பதற்காகத் தனிக் கூடங்கள் இருந்தன. நூல் நிலையமும் தனிக் கூடத் தில் இருந்தது. ஒரு படிக்கும் கூடமும் இருந்தது. அத்துடன் மாணவர்கள் உணவு விடுதிக்குத் தகுதி

யான கட்டடங்களும் இருந்தன. நளந்தாவில் ஏராள மான புத்தகத் தொகுப்புகள் இருந்தன. அக் காலத்திய கற்றறிந்த பேராசிரியர்களின் பெயர்கள் பல காணப்பட்டன. அவர்களில் தர்மபால், சந்திர பால், ஸ்திரமதி, குணமதி, ஆகியோர் உலகப் புகழ் பெற்றவர்கள். சீல பத்ரா என்பவர் கல்லூரித் தலைவ ராவர். இந்தப் பெயர் பெற்ற பேராசிரியர் வங்காளத்தி லிருந்து வந்தவர். அல்லது இந்தியாவின் கிழக்குப் பகுதியிலிருந்து வந்தவர். இவ்வாறு சிலர் கருதுகின் றனர். பேச்சுப்போட்டி, வினு விடைகள், ஒருவரோடு ஒருவர் விவாதித்தல் ஆகியவை பல்கலைக் கழகக் கல்வியின் முக்கிய அமைப்புகளாகும். பாடத்திட்டம் கடினமான பல கல்விப் பிரிவுகளை உடையது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எழுத்துக்கள் போதனை யில் முதல் பாடங்களும் எளிய இலக்கணமும் போதிக் பட்டன. இவை முடிந்த பிறகு உரைநடையில் கட்டுரைகளும் செய்யுள்களும் தொடங்கப் பெற்றன. மொழி அறிவில் நல்ல அடிப்படை அமைந்தபிறகு மற்றச் சிறப்பான பாடங்கள் போதிக்கப்பட்டன. அவை இலக்கண இலக்கியங்கள், தர்க்க நூல், வைத்தியம் ஆகியவற்றின் பாடங்கள் ஆகும். நளந்தா உண்மையில் ஆழ்ந்த அறிவை வளர்த்து வந்தது என்று இது காட்டுகிறது. இப் பல்கலைக் கழகத்தில் இடம் கிடைப்பது மிக மிகக் கடினமா யிருந்தது. அங்குத் 'துவார பண்டிதர்கள்' (நுழைமுக அறிஞர்கள்) என்று இருந்தனர். ஒரு புதிய மாணவன் வந்ததும் அவர்கள் தகுந்த கேள்விகள் மூலமாகச் சோதனை செய்வர். இக்கேள்விகளுக்குத் திருப்திகரமான பதில்கள் கிடைத்தால் அவன் இங்குச் சேர அனுமதி பெறுவான்.

யுவான் சுவாங் நாட்டின் உட்புற நிலைமைகளை யும் நன்கு விவரித்திருக்கிறார். அந்நாட்களில் பேரறிஞர்களுக்கும் மேதைகளுக்கும் (தெய்வீகத் தத்துவ மேதைகள்) நிலதானம் வழங்குவது வழக்கம். விவசாயம் நல்ல நிலைமையில் வளர்ச்சி யடைந்திருந்தது. மிகவும் நெருக்கமாகக் கிராமவாசி கள் மக்கள் தொகை இருந்தது. வட இந்தியா வில் சாலைகளும் நீர் மார்க்கங்களும், பாதுகாப்பற் றிருந்தன. எப்பொழுதாகிலும் திருடர்களாலும் கொள்ளைக் கூட்டத்தவராலும் தொல்லைகள் நேர்ந் தன. குப்தப் பேரரசர் ஆட்சி காலத்தில் பா ஹியான் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்தார். ஆனால் அவர் எங்கும் எவ்விதமான அபாயமும் அடைய வில்லை. யுவான் சுவாங் இருமுறை வழிப்பறிக்காரர் களிடம் சிக்கினார். ஆயினும் குற்றம் புரிவோர் எண்ணிக்கையில் அதிகம் இல்லை. இவ்வாறு யுவான் சுவாங் எழுதியிருக்கிறார். பொதுவாக மக்கள் அமைதியில் விருப்பமுள்ளவர்கள். நேர்மையில் உறுதியான எண்ணமுடையவர்களாக இருந்தனர். அவர்கள் வறுமையினாலும் துன்பத்தினாலும் தமது இருப்பை இழக்க நேர்ந்தாலும் தம்மைச் சார்ந்தவர் எவரையும் வழி பறிக்கமாட்டார்கள். அவர்கள் தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள். எவரையும் மோசம் செய்ய மாட்டார்கள். எப்பொழுதும் சொன்ன சொல்லைக் காத்தனர்.

இவற்றுடன், நாட்டு வாணிகம் சிறந்த நிலை யில் இருந்தது. கடல் மார்க்கமாகவும் வர்த்தகம் நடைபெற்று வந்தது. ஒரு புறம் அயல் நாடு களிடையேயும் இன்னொரு புறம் மேற்கு இந்தியா

வில் குஜராத் மலபார் ஆகியவற்றுடனும் வர்த்தகம் நடந்தது. அப்பொழுது வங்காளத்தில் தாமிர லிப்தா (இன்று தாம்லூக் எனப்படுகிறது.) தான் முக்கியத் துறைமுகமாய் இருந்தது. அப்பொழுது கப்பல்கள் கிழக்குக் கடல் மார்க்கமாகச் சீனுவுக்குச் செல்வது வழக்கம்.

## சாளுக்கிய ராஜ்யம்

**யு**வான் சுவாங் ஒரிசாவையும் தட்சிணத்தையும் பார்வையிட்டார். தமது பயணத்தை விவரிக்கும் வகையில் அவர் பாதாமி நாட்டின் சாளுக்கிய அரசர்களின் அரிய செயல்களைக் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் தெற்கில் அமைந்திருந்த பகுதிகளை ஆண்ட பல்லவ அரசர்களையும் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் பெயர் பெற்ற அரசர்களில் சாளுக்கிய வமிசத்தைச் சேர்ந்த இரண்டாம் புலிகேசி ஒருவர். ஹர்ஷ வர்த்தனர் புலிகேசியால் தோற்கடிக்கப் பட்டார். இதைச் சிலர் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனல் முதலாமவர் மற்றவரை எவ்விதத்திலும் தோற்கடிக்கவில்லை என்பது முற்றிலும் உண்மை. அக் காலத்தில் புலிகேசியின் பேரரசு விந்தியமலைகளுக்குத் தெற்கில் நெடுகப் பரந்திருந்தது. மேற்கில் குஜராத் மலபார் ஆகியவையும், சோழ, பாண்டிய, பல்லவமும் இவருடைய ஆதிக்கத்தின் கீழ் வரலாயின. கி. பி. 641 இல் யுவான் சுவாங் இப்பகுதிகளைப் பார்வையிட்டார். இரண்டாம் புலிகேசியின் பண்பையும் வீரமிக்க செயல்களையும் நன்கு அறிந்திருந்தார். அவர் மிகுந்த அறிவுத் திறனும் ஆழ்ந்த உணர்வும் உள்ளவர் என்று குறிப்பிட்டிருக்கிருர். சாளுக்கியப் படையினர்

வல்லமையுடன் போரிடுபவர்கள். அவர்கள் யானை களைக் கோபமூட்டிக் கொம்புகளையும் எக்காளங் களையும் ஊதியவாறு முன் செல்வர். தமது யானைகள், படையினர் ஆகியவற்றின் எண்ணிக்கை மிகுதியால் அரசர் தமது எதிரிகள் எவருக்கும் அஞ்சவில்லை. அவர் அரசு 836 மைல் குறுக்கள வுள்ளது. தலைநகரம் ஒரு செல்வமிக்க நகரமா யிருந்தது. நாட்டு மக்களுக்கு எளிதில் கோபம் வந்துவிடும். அப்பொழுதே மன்னித்தும்விடுவார்கள். ஒரு படைத்தலைவர் போரில் தோற்று விட்டார் என்ருல் அவருக்குத் தண்டனை தருவதில்லை. அவரை அவமானம் செய்வதற்காக பெண் உடை உடுத்திவிடுவார்கள். சாளுக்கிய அரசர்கள் அஞ்சா நெஞ்சமுள்ள போர்வீரர்கள் மட்டுமல்லர்; கலை களில் ஆர்வமுள்ளவர்கள். பெயர்போன பாதாமிக் குகைக் கோவில்கள் அவர்களின் ஆதரவில் நிறுவப்பட்டவை என்று காட்டுகின்றன. இந்தக் கோவில்களின் சித்திரக் கலையழகு ஈடு இணை யற்றவை.

## பல்லவ ராஜ்யம்

சாளுக்கியருக்குப் பலம் பொருந்திய எதிரி கள் பல்லவர். யுவான் சுவாங்கின் விஜயத்தின் போது பல்லவ அரசராக இருந்தவர் நரசிம்மவர்மர். அந் நாட்களில் காஞ்சி பல்லவர்களின் தலைநகரமா யிருந்தது. அது தென் இந்தியாவிலேயே கலைகள், மதம் ஆகியவற்றின் இருப்பிடமாய் இருந்தது. சாளுக்கியர்களுடன் போரும் பகையுமாய் இருந் தனர். அதற்கு மாருகப் பல்லவ ராஜ்யத்தில் கலைகள் வியப்பளிக்கும் வகையில் முன்னேற்ற மடைந்

திருந்தன. சிற்பக்கலையில் பல்லவர்களின் நினைவுச் சின்னங்கள் உண்மையில் மிகச் சிறந்தனவாகும். மஹாபலிபுரம் கடற்கரையில் ஏழு தனித்தனி கற்பாறைகளில் செதுக்கப்பட்ட கோவில்கள் உள்ளன. அவை கணேசர், யுதிஷ்டிரர், அர்ஜுனர் முதலியவர்களின் ரதங்கள் எனப்படுவன ஆகும். அருகாமையில் கிருஷ்ண மண்டபம் எனும் ஓர் இடம் இருக்கிறது. அங்கு உயிருள்ள உருவங்களைப் போன்று மனிதர்கள், பிராணிகளின் உருவங்கள் உள்ளன. ஒரு குன்றின் மேற்பரப்பில் இவை பரவலாகச் செதுக்கப்பட்டுள்ளன. கோவில் அமைப்பதில் இது புதிய கலைத்திறமையும் முறையுமாகும். இவற்றைத் தோற்றுவித்த பெருமை பல்லவர்களையே சாரும். காஞ்சியின் பல்லவ அரசர்களை யுவான்சுவாங் மிகவும் புகழ்ந்திருக்கிறுர்.



# ஈசிங் வரலாறு

யுவான் சுவாங்குக்குப் பிறகு இந்தியாவுக்கு விஜயம் செய்தவர் ஈசிங் ஆவர். அவர் கி. பி. 635-ல் பிறந்தார். அவருடைய ஏழாம் வயதில் தமது ஆசான் வீட்டில் அவருக்குக் கல்வி போதனை தொடங்கியது. அவருக்குத் துறவியாக வேண்டும் என்ற ஆவல் இருந்தது. ஆனால் அவருடைய பன்னிரண்டாம் வயதில் தந்தை இறந்தார். பிறகு அவர் நாடோடிச் சாமியாரானர். பதினெட்டாம் வயதிலிருந்தே இந்தியாவைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு அதிகரித்தது. ஆயினும் முப்பத்தேழாம் வயது வரை அவருடைய ஆவல் நிறைவேறவில்லை. இதற்கிடையில் இருபது ஆண்டுகள் பௌத்த சமய நெறிகளைப் படித்தறிவதில் காலம் கழித்தார். அவர் இயல்பாகவே மதப் பற்றுள்ளவர். பல மத நூல்களைப் படித்ததன் பயனாக அவர் ஒரு பேரறிஞரானர். சீனவின் பெரும் பகுதிகளைச் சுற்றினர். யுவான் சுவாங்கின் பேரறிவைப் பற்றி அறிந்தார். அவர் இந்தியாவுக்கு விஜயம் செய்ததைப் பற்றியும் கேள்விப்பட்டார். அவருடைய கதைதான் இவருக்கு இந்தியா செல்ல வேண்டும் என்ற ஆவலைக் கிளப்பியது.

கி.பி. 670-ல் ஈசிங் சில நண்பர்களுடன் புத்தமதம் தோன்றிய இடமான இந்தியாவுக்கு யாத்திரை செல்ல வேண்டும் என்று தீர்மானித்தார். இந்த நாட்களில் அவர் தாமே சம்பவங்களைக் குறித்து வைத்தார். முதலில் நண்பர்கள் மிகவும் ஆர்வம் காட்டினர். நாளடைவில் நின்றுவிட்டனர். ஆனல்

ஈசிங் நம்பிக்கை இழக்கவில்லை. அவருடைய குருவின் அனுமதியுடன் தாம் தனியாகவே யாத்திரை செல்வது என்று தீர்மானித்தார். கி. பி. 671-ல் கப்பல் ஏறினுர்.

சீனுவை விட்டுப் புறப்பட்ட பிறகு முதலில் போகம் என்ற நாட்டிற்கு வந்தார். அங்கு அவர் ஆறுமாதம் வரை சமஸ்கிருதத்தைக் கவனத்துடன் கற்ருர். பிறகு மீண்டும் ஒரு முறைக் கப்பல் ஏறினுர். மலேயாவுக்கு அருகில் உள்ள சுமத்திரா தீவில் இறங்கினுர். அந்நாட்களில் ஸ்ரீ போக ராஜ்யத்துடன் இப்பகுதி இணைந்திருந்தது. இங்கு அவர் சிலகாலம் தங்கியிருந்தார். ஓய்ந்த நேரத்தில் சமஸ்கிருதத்தையும் பெளத்த இலக்கியங்களையும் படித்தறிந்தார். அதன் பிறகு மறுபடியும் கப்பல் ஏறினுர். கிழக்கு இந்தியாவின் மிகப் பெரிய துறைமுகமான தாமிர லிப்தாவில் இறங்கினுர். இப்பொழுது இந்தநகரம் தாம்லூக் என்று அழைக்கப்படுகிறது. இங்கு இவர் சிலகாலம் தங்கியிருந்தார். பிறகு சில வர்த்தகர்களுடன் தொடர்ந்து சென்ருர். ஆனுல் கடைசியில் அவர்களை விட்டுப் பிரிந்தார். அவர்கள் மேற்கு நோக்கிச் சென்றனர். அவர் தனியாகவே கடினமான அயல் நாட்டுச் சாலைகள் வழியாகப் பதனம் செய்தார். கயாவுக்கு அருகில், ஒரு மலைப்பாதையில் அவர், வழிபறிக்காரர்களால் தாக்கப்பட்டார். அவர் வழிபறிக்கப்பட்ட வற்றில் தமது இடுப்பாடையை மட்டும் முயன்று திரும்பப் பெற்ருர். பிறகு அவர் தெற்கு நோக்கிச் சென்ருர். அங்கு பீஹாரில் இருந்த பெயர் பெற்ற நளந்தா பெளத்த விஹாரத்துக்கு வந்து சேர்ந்தார்.

நளந்தா பல்கலைக் கழகத்தில் ஈசிங் சுமார் பத்து ஆண்டுகள் தங்கினார். அங்கிருந்து அருகில் உள்ள பௌத்த யாத்திரை ஸ்தலங்களைத் தரிசித்தார். அவர் முக்கியமான புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்து வந்தார். காசிக்கு அருகில் சாரநாத், நேபாள எல்லையில் புத்தர் பிறந்த இடமான கபிலவாஸ்து ஆகிய இடங்களைத் தரிசித்தார். வைசாலி, சிரவாஸ்தி, ராஜகிருஹம் ஆகியவற்றையும் கண்டார். கி. பி. 688-இல் நளந்தாவை விட்டுச் சென்றார். தாமிர லிப்தாவுக்கு மீண்டும் வந்தார். அவரிடம் பௌத்த மத நூல்கள் பல இருந்தன. மறு முறையும் அவர் வழிபறிக்காரர்களால் தாக்கப்பட்டுத் துயருற்றார். பிறகு துறைமுகத்திலிருந்து சென்ற கப்பல் ஒன்றின் மூலமாக மலேயாவுக்குச் சென்றார். இங்கு அவர் கண்டனவற்றைக் குறிப்பதற்காகத் தங்கினார். பௌத்த சமயத்தைப் பற்றிய புகழ் பெற்ற புத்தகத்தைத் தமது நாட்டுக்கு அனுப்பி வைத்தார். பௌத்த சமயம், பௌத்த மத நெறி முறைகள் அத்துடன் மற்றும் பல மதிப்புமிக்க நூல்களையும் அனுப்பினார். கி.பி. 695-இல் அவர் தமது சொந்த நாட்டிற்குத் திரும்பினார். அவர் நாட்டு அரசாங்கம் அவருக்கு நல்ல வரவேற்பு அளித்தது. அவர் இரண்டடிகளாலான நீதி நூல்கள் ஐந்து கட்டுகளையும், பல விலையுயர்ந்த வண்ணச் சித்திரங்களையும் கையெழுத்துப் பிரதிகளையும் தம் தாயகத்திற்குக் கொண்டு சென்றார்.

ஈசிங் இந்தியாவின் பல இடங்களையும் இருபத்தைந்து ஆண்டுகள் சுற்றிப் பார்த்தார். அவர் இங்கு ஒரு கணமும் வீணாக்கவில்லை. புண்ணிய ஸ்தலங்களைத் தரிசிப்பதில் தம் பொழுது முழுமையும்

கழித்தார். மத நூல்களைப் படித்துப் பொழுது போக்கினார். சமஸ்கிருதம், பாலி மொழிகளைக் கற்றார். இந்திய கையெழுத்துப் பிரதிகளைத் தொகுத்தார். இந்தக் கையெழுத்துப் பிரதிகளைச் சீன மொழியில் மொழி பெயர்த்தார்.

அவர் எவ்வளவு சிரமப்பட்டு உழைத்தார் என்பதை அறிந்த எவரும் வியப்படைந்து விடுவார்கள். இந்தியாவின் மதம், கலாசாரம், வாழ்க்கையை அறிந்து கொள்ள எவ்வளவோ கவனம் செலுத்தினார். மற்றவர்களைப் புரிந்து கொள்ளச் செய்யவும் அவ்வளவு கவனம் செலுத்தினார். இந்நாட்டு மக்களின் வாழ்க்கையையும் நடத்தையையும் பற்றித் தெரிந்து கொள்ள மிகவும் அக்கரை செலுத்தினார். அன்றைய பௌத்த சமயத்தின் நிலைமையை ஈசிங்கின் வரலாற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம். அந்நாட்களில் இருந்த பல்வேறு இனத்தவர், அவர்களின் கொள்கைகள் ஆகியவற்றின் நிலைமையை அறியலாம். சீனாவுக்குத் திரும்பிய பின்னரும் அவர் ஓய்ந்திருக்கவில்லை. அங்கும் அவருக்கு ஒன்பது இந்திய அறிஞர்கள் உதவி புரிந்தனர். அவர்களில் சிக்ஷாநந்தா, ஈஸ்வரா ஆகியோரும் இன்னும் பிறரும் இருந்தனர். பன்னிரண்டு ஆண்டுகள் பௌத்த மதக் கொள்கைகளை விமரிசனம் செய்யும் வேலையிலும் மொழி பெயர்ப்பதிலும் அவர் ஈடுபட்டிருந்தார். அவர் கி. பி. 713-ல் இறந்தார்.

ஈசிங் ஒரு கற்றறிந்த மேதை மட்டு அல்லர். மதசம்பந்தமான தத்துவங்களில் தேர்ந்தவர். அவர் பயனுள்ள செயல்களைச் செய்த செயல் வீரர். ஒருவர்

அந்நாட்களில் இந்தியாவிலும் மலேயாவிலும் பரவி யிருந்த புத்தமதக் கொள்கைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பலாம். ஈசிங் குறித்து வைத்திருந்த பிரயாணக் குறிப்புகளையும் நினைவுக் குறிப்புகளையும் பற்றிய புத்தகங்களைப் படிக்காமல் அறிய முடியாது. இவற்றுடன் ஐம்பத்தாறு புத்த மதக் கையெழுத்துப் பிரதிகளை அவர் சீன மொழி யில் மொழி பெயர்த்திருந்தார். அவை இருநூற்று முப்பது தொகுதிகளாக இருக்கின்றன. பா ஹியான், யுவான் சுவாங் ஆகியோர் புகழ் வாய்ந்த யாத்திரீ கர்கள். ஆனால் ஈசிங் இவர்களைப் போன்று புகழ் பெற்றவரல்லர். ஆயினும் அவர் பெரிய அறிஞரா வார். ஓர் உறுதிமிக்க, பயனுள்ள செயல் வீரர். பா ஹியான், யுவான்சுவாங், ஈசிங் ஆகியோர் வரலாற்றிலிருந்து ஒருவர் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் வளர்ந்து வந்த உறவைப் பற்றி அறியலாம். இவ்விரு நாடுகளும் ஒன்றோ டொன்று கொண்டிருந்த தொடர்பைப் பற்றிய உண்மைகளையும் அறியலாம்.

அயல் நாட்டவர் கண்களுக்குப்

# புராதன இந்தியா

●

இந்திய அரசாங்கத்தினுல் புதிதாக எழுத்தறிவு
பெறுவோர்க்கென முதற்பரிசு
வழங்கப்பெற்ற புத்தகம்

●

விற்பனை உரிமையாளர்கள் :

**பறம்பு நிலையம்**

131, பிராட்வே : : சென்னை-1.

Wrapper Printed at The Progressive Printers, Madras-1.